# இலங்கை: தன்பாலீர்ப்பாளர்கள், இருபாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர்களுக்கு சமத்துவத்தையும் பாரபட்சமின்மையையும் உறுதி செய்தல்

*மதுரி தமிழ்மாறன், தேசிய சட்ட ஆலோசகர் – இலங்கை, சர்வதேச சட்டவல்லுனர் ஆணைக்குழு*

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஒரு டுவிட்டர் பதிவின் மூலம் கணிசமான பொது கவனத்தைப் பெற்றுக்கொண்டார். பாரபட்சமின்மை நாளுக்கான தனது டுவிட்டர் பதிவில் "வயது, **பால்நிலை, பாலியல்பு**, இனம், உடற் தோற்றம் மற்றும் நம்பிக்கை போன்ற காரணிகளைக் கருதாது அனைவரும் **சுய கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையை** நிலை நாட்டுவதற்கான" தனது விருப்பத்தை தெரிவித்தார்.[1]

அறிக்கைகளின் படி, தெற்காசிய நாட்டுத்தலைவர் ஒருவரினால், பாலியல்பு மற்றும் பால்நிலை காரணமாக யாரும் பாரபட்சமாக நடத்தப்படக்கூடாது என வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டது இதுவே முதல் முறையாகும் இதன் மூலம் **பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் அல்லது வெளிப்பாடு சார்ந்த பாரபட்சமின்றி அனைவரும் கௌரவமாக வாழும் உரிமையை** இந்த பதிவு ஏற்கிறது. ஜனாதிபதி ஒரு புதிய அரசியலமைப்பினை வரையும் ஏற்பாடுகளை ஆரம்பித்திருக்கும் தருணத்தில் மற்றும் அதன் முதல் வரைபு விரைவில் வெளியாகவுள்ள நிலையில் இந்த பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பதிவானது இலங்கையில் மிகவும் அவசியமாக காணப்படும் பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு குறித்த கலந்துரையாடலுக்கான வாய்ப்பை திறந்து கொடுத்துள்ளது. முக்கியமாக தன்பால் ஈர்ப்புடைய பெண்கள், தன்பால் ஈர்ப்புடைய ஆண்கள். இரு பாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர்கள் சட்டத்தின் அடிப்படையில் பாரபட்சமாக நடத்தப்படாது இருப்பதை உறுதி செய்வதற்கான, அரசாங்கத்தின் கடப்பாட்டினை குறித்த கலந்துரையாடலை இது ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதற்கும் அனைவருக்கும் சட்டத்தின் அடிப்படையில் சமமான பாதுகாப்பையும் உத்தரவாதம் செய்கிறது (12ம் உறுப்புரை). அது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து மற்றும் பிறப்பிடம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்ட பாகுபாட்டினை தடை செய்கிறது. குறிப்பாக பார்க்கையில், அரசியலமைப்புச்சட்டம் பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும்/ அல்லது வெளிப்பாடு தொடர்பான பாரபட்சத்தை தடை செய்யவில்லை.

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் (1883) பிரிவு 365 மற்றும் 365A முறையாக, "இயற்கை விதிக்கு மாறான பாலியல் புணர்வு" மற்றும் "பாரதூரமான இழி செயலையும்" குற்றமாக வரையறை செய்கிறது. இந்த இரண்டு பிரிவுகளுமே தன்பால் ஈர்ப்புடைய நபர்களுக்கிடையிலான் சம்மதத்துடனான பாலியல் உறவை குற்றப்படுத்த பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆயினும் தண்டனைச்சட்டக்கோவை இந்த பிரிவுகளில் பாவிக்கப்பட்டிருக்கும் சொற்களுக்கான விளக்கம் எதனையும் வழங்கவில்லை. இந்த குற்றத்தில் கைது செய்யப்படுவோருக்கு 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அளிக்கப்படக்கூடும்.

[1] https://twitter.com/GotabayaR/status/1366258501886955526

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 399 "பால்நிலை ஆள்மாறாட்டத்தை" குற்றமாக வரையறுக்கிறது, அத்துடன் அது அதிகமாக திருநர்களுக்கு எதிராக அவர்கள் "பொது மக்களிடையே தவறான எண்ணத்தை தோற்றுவிக்கின்றார்கள்" எனக்கூறி, அவர்களை குற்றப்படுத்த, பாவிக்கப்பட்டு வந்துள்ளது. மேலும் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டமும் (1842), பால்நிலை நெறிமுறைகளை பின்பற்றாத நபர்களை, விசாரிக்க, அச்சுறுத்த, தடுத்து வைக்க மற்றும் புலன் விசாரணை செய்ய பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

அத்துடன், அரசியலமைப்பு சட்டத்தின் 16ம் உறுப்புரை 'ஏற்கனவே காணப்படும் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்கள் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்துடன் ஒவ்வாததானதாக இருந்தாலும் தொடர்ந்தும் செல்லுபடியானவையாகவும், செயற்பாட்டில் உள்ளவையாகவும் இருக்கும்' எனக் குறிப்பிடுகின்றது. இதன் பலனாக ஏற்கனவே காணப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை மற்றும் அலைந்து திரிவோர் கட்டளை சட்டம் போன்றவற்றின் நீதிமன்ற மீளாய்வு தடுக்கப்பட்டுள்ளது. இது அதிகார துஸ்பிரயோகத்துக்கு இடம்கொடுப்பதோடு பல்வகை பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு உள்ள நபர்களுக்கு எதிராக பொலிஸார் அதிகமான மனித உரிமை மீறல்களை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

கடந்த வருடம் ஒரு உள்நாட்டு பத்திரிக்கையினால் நடத்தப்பட்ட விசேட ஆய்வொன்றில், தன்பால் ஈர்ப்புள்ள பாலியல் நடத்தை குறித்த ஆதாரங்களை சேகரிக்க மனித நேயமற்ற முறைகளான சாட்டையால் அடித்தல் மற்றும் குத/யோனி பரிசோதனைகள் போன்ற சித்திரவதை அல்லது தவறான நடத்தையாக கணிக்கப்படுபவை, தன்பால் ஈர்ப்புள்ள நபர்கள் மற்றும் திருநருக்கு எதிராக இலங்கை அதிகாரிகளினால் பயன்படுத்தப்படுகிறது என கண்டறியப்பட்டது. நீதிமன்ற கட்டளையினால் எச்.ஐ.வி பரிசோதனை செய்யப்பட்டு அது பொதுவான நீதிமன்ற அரங்கில் அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இது சம்மந்தப்பட்டவர்களின் அந்தரங்கத்துக்கான உரிமையை மீறும் செயற்பாடாகும். இவ்விடயங்கள் வெளியானதையடுத்து, நீதியமைச்சர் கௌரவ அலி சப்ரி அவர்கள், பொறுப்பான அதிகாரிகளுக்கு இவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் நடைமுறைகளை நிறுத்துமாறு உத்தியோகபூர்வ அறிக்கையொன்றில் அறிவுறுத்தல் வழங்கினார், அத்துடன் பால்நிலை, பாலியல் தெரிவுகள் மற்றும் அடையாளம் சார்ந்து பாரபட்சமாக நடத்தப்படாதிருத்தல் குறித்த தன் எண்ணப்பாட்டையும் வலியுறுத்தினார். மேலும் கடந்த மாதம் கூட திருநர்களை துன்புறுத்த வேண்டாமெனவும் அவர்களை கௌரவமாக நடத்துமாறும் நீதிபதிகள் பொலிஸாரை எச்சரித்தனர் எனச் செய்திகள் வெளிவந்தன.

2014ம் ஆண்டில், அப்போதிருந்த இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழுவுக்கு, இலங்கை அரசியலமைப்பு சட்டத்தின் 12ம் உறுப்புரை, பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் சார்ந்த பாகுபாடின்மையையும் உள்ளடக்கியது என அறிவித்தனர். ஆனாலும் நாம் மேலே பார்த்தவாறு சட்டத்தின் வெளிப்படை பிரிவுகள் மற்றும் அதன் நடைமுறைப்படுத்தல் இந்த வாதத்தை மறுக்கிறது. மேலும் 2017ம் ஆண்டில், மனித உரிமை பேரவையின் சர்வதேச தவணை வாரியான மீளாய்வில், இலங்கை பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் சார் பாரபட்சத்தினை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் எடுப்பதாக வாக்குறுதி வழங்கியது. எவ்வாறிருப்பினும் அன்று முதல், பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாட்டை மனித உரிமை செயற் திட்டத்தில் இணைக்க எடுத்த அனைத்து முயற்சிகளும் அமைச்சரவையில் காணப்பட்ட எதிர்ப்பினால் கைவிடப்பட்டன.

தெற்காசியாவில் இலங்கையின் அயல் நாடுகள் முற்போக்கான முன்னேற்றங்களை அடைந்துள்ளன. இந்தியா மற்றும் பூட்டான் சம்மதத்துடனான தன்பால் ஈர்ப்புள்ள பாலியல் நடத்தையை குற்றமற்றதாக அறிவித்துள்ளன. 2004ம் ஆண்டில் தான் பூட்டானின் தண்டனை சட்டக்கோவை 'இயற்கை நியதிக்கு மாறான பாலியல் நடத்தையை' குற்றமாக்கியது, எனினும், தன்பால் உறவில் உள்ள நபர்கள் தாமாக எச்.ஐ.விக்கான சிகிச்சை பெறுவதை இது தடுக்கும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதனாலும், பரிந்துரை செயற்பாடுகளின் விளைவாகவும் இது குற்றமற்றதாக அறிவிக்கப்பட்டது. 2018ம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றம், இந்திய தண்டனைக் கோவைச் சட்டத்தில் சம்மதத்துடனான தன்பால் ஈர்ப்புடைய பாலியல் உறவை குற்றப்படுத்த பயன்பட்ட, பிரிவு 377ஐ மீளாய்வு செய்து அது தன்பால் ஈர்ப்புடைய நபர்கள், ஈர்ப்பாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர் மத்தியில் காணப்படக்கூடிய சம்மதத்துடனான பாலியல் உறவை குற்றப்படுத்த பாவிப்பது அரசியலமைப்பிற்கு எதிரானதெனவும், சமத்துவத்திற்கான உரிமை உட்பட, குறிப்பிட்ட அடிப்படை உரிமைகளை மீறுதலாகும் என அறிவித்தது. 2018ம் ஆண்டு பாகிஸ்தான், தான் விரும்பும் பால்நிலை அடையாளத்துக்கான சட்ட ரீதியான அங்கீகாரம் உட்பட திருநர்களின் மனித உரிமைகளை அங்கீகரித்து ஒரு புதிய சட்டத்தை ஏற்படுத்தியது. வேறு காரணங்களோடு, இவ்வாறான பாரபட்சமான சட்டங்கள், பிரித்தானிய காலனித்துவக் கால சட்டங்களின் மீதமாக இருந்தன மற்றும் அதன் தாக்கத்தில் இருந்து வெளிவர வேண்டும் என்ற புரிந்துணர்வும் இவ்வாறான முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தன.

இலங்கையில், தன்பால் உறவுகள் குறித்து சமூகத்தில் காணப்படும் பயம் ஒரு அடிப்படை கலாசார பிரச்சனையாக நோக்கப்படுகிறது. எனினும் காலம் மாறி வருகிறது என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. தற்போது ஊடகங்களில் தன்பால் ஈர்ப்புள்ள நபர்கள், இரு பாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர்களை உள்ளடக்கிய மற்றும் அவர்களின் மனித உரிமைகள் குறித்த கலந்துரையாடல்களுக்கு அதிக இடம் வழங்கப்படுகிறது. பிரைட் கொண்டாட்டங்கள் என அழைக்கப்படும் பல்வகை பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளை கொண்டாடும் நிகழ்வுகளும் ஊடகங்களினால் பதிவு செய்யப்படுகின்றன. இதேவேளையில் 2016ம் ஆண்டு, வயது வந்தவர்களிடையே இடம்பெறும் சம்மதத்துடனான பாலியல் உறவுகளில் அரசு தலையீடோ கட்டுப்பாடுகளோ செய்யக்கூடாதெனவும் அது குற்றமாக கருத்தப்படக்கூடாதெனவும் உயர்நீதிமன்ற தீர்ப்பொன்று தெரிவித்தது. பூட்டானினால் 2004ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாரபட்சமான சட்டத்தை இரத்து செய்ய முடியுமானால், நிச்சயமாக இலங்கையும் அதன் அயல் நாடுகளின் வழியை பின்பற்றி, காலனித்துவ காலத்து விலங்குகளில் இருந்து விடுதலை பெற்று, தன்பால் ஈப்புடைய நபர்கள், இரு பாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர்கள் சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதி செய்ய முடியும்.

தன்பால் ஈர்ப்புள்ள நபர்கள், இரு பாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர் உட்பட அனைத்து மக்களையும் சமமாக நடத்த இலங்கை சர்வதேச அளவில் வழங்கியுள்ள மனித உரிமை வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நேரம் இது. இது ஜனாதிபதி தன் டுவிட்டர் பதிவு மற்றும் இதற்கு முன் அரசாங்கம் செய்துள்ள வாக்குறுதிகளின் மீதுள்ள எதிர்பார்ப்பின் வெளிப்பாடு. கடந்த ஆண்டு ஜனாதிபதி புதிய அரசியலமைப்பு சட்டத்தை வரைய 'நிபுணர் குழுவினை' நியமித்தார். பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு சார்ந்த பாரபட்சமின்மையை புதிய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பில் உள்ளடக்குவது, இலங்கை அரசின் சர்வதேச சட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதுடன் அது தன்பால் ஈர்ப்புள்ள

நபர்கள், இருபாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநருடனான அரசின் உறவை மீளக் கட்டியெழுப்புவதற்கான முதல் படியுமாகும்.